R2025 (page 199)

# அப்சலோமின் வீழ்ச்சியும், மரணமும்

# ABSALOM'S DEFEAT AND DEATH

2 சாமுயேல் 18:9-17, 32, 33

"கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்." - சங்கீதம் 1:6

தந்திரமாய்த் திட்டமிடப்பட்டிருந்ததும், திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுமான அப்சலோமின் சதித்திட்டமானது, இறுதியில் தாவீதை எருசலேமிலிருந்து வெளியேற்றி, அங்கு அப்சலோமைத் தங்கப்பண்ணிற்று. ஆனாலும் உரிமையுள்ள இராஜாவாகிய தாவீது உயிரோடு இருக்கும்வரை, சதித்திட்டம் போட்டவர்களின் வெற்றி முழுமையானதாக இருக்கவில்லை. ஆகையால் அப்சலோமும், அவரது ஆலோசகர்களும் இராஜாவைக் கொன்றுபோடுவதற்குத் திட்டம் தீட்டினவர்களாகக் காணப்பட்டனர்.

ஆனால் கர்த்தரோ, ஊசாய் எனும் நண்பனை தாவீதிற்காக எழுப்பினார்; இவரை அப்சலோமின் ஆலோசகர்கள் மத்தியில் கொண்டுபோனார்; இப்படியாக இவரது ஆலோசனையின் மூலமாக, அந்த மதியீனமான மற்றும் பொல்லாத சதித்திட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. பெருமைகொண்டவராகவும், தன் தகப்பனைக் கொன்றுபோட வேண்டும் என்ற பொல்லாத இருதயத்தினைக் கொண்டவராகவும் காணப்பட்ட அப்சலோம், தன்னை ஒரு பெரும் படையின் தலைவனாக்கிக்கொண்டு, யுத்தம்பண்ணும்படிக்குப் புறப்பட்டுபோனார். இந்தப் பொல்லாத தன்மையோடு, இவரது தகப்பனுடைய அன்பை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, தாவீது இம்மாதிரியான கடும் சோதனைகளின்கீழ், அப்சலோமை சந்திக்கச் சென்ற தன் மனுஷர்களிடம், "பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்" என்று கூறுவதைப் பார்க்கின்றோம்.

தேவன் சடுதியாய் இந்தப் பொல்லாத வாலிபனின் தீய திட்டங்களை ஒன்றுமில்லாமலாக்கிப் போட்டார்; தன் வெற்றியின் நிமித்தம் பெருமிதத்தோடும், வெற்றியை எதிர்பார்த்து பெருமையோடும் கழுதையின்மீது ஏறி வந்துகொண்டிருந்த அப்சலோமின் தலை, பெரியதொரு கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டது; இவர் ஏறிவந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று; இவர் உதவியற்றவராக தொங்கிக் கொண்டிருந்தார்; தாவீதின் நண்பர்கள் இவர் கதையினை முடித்தனர். யோவாப் வெற்றியின் எக்காளத்தை ஊதினார்; சதித்திட்டம் ஒன்றுமில்லாமலாக்கப்பட்டது; இராஜ உரிமையினைப் பறிக்க முயன்றவர் மரித்துப்போனார்; இவர் கற்குவியலின்கீழ்ப் புதைக்கப்பட்டார்; இவரோடுகூட காணப்பட்டவர்கள் வெட்கத்தினால் தங்கள் முகத்தை மறைத்துக்கொண்டனர்; கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டவராகிய தாவீது இராஜா, சமாதானத்தோடே எருசலேமுக்குத் திரும்பினார்.

இந்தச் சந்தர்ப்பங்களிலிருந்து கடந்துவரும் பாடங்களில், தீமை செய்கிறவர்களின் வெற்றி எத்தனை சொற்ப காலமே நீடிக்கின்றது என்பதைக் கவனிப்போமாக. "அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது; அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது" (சங்கீதம் 73:7); "இப்போதும் அகங்காரிகளைப்

பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரீட்சைபார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்" (மல்கியா 3:15); எனினும் சீக்கிரத்தில் இவர்கள் யாவரும் நீதிமான்களுடைய பாதங்களின்கீழ்த் துரும்பாக்கப்படுவார்கள் (மல்கியா 4:1); ஒடுக்கப்படுதலினால் பாரப்படுபவர்களுக்கு நீண்டகாலம் எடுத்துக்கொள்ளப்படுவதுபோன்று உண்மையில் தோன்றலாம்; ஆனால் இது தேவனுடைய பார்வையில் நீண்டகாலமாகக் காணப்படுவதில்லை. அவரது நோக்கங்களின் ஞானம் அனுமதிப்பதற்கேற்ப, அவர் சீக்கிரமாய் நியாயத்திற்கு ஜெயம் கிடைக்கப்பண்ணுவார். ஒருவேளை நீதி/நியாயம் தாமதமாகுகின்றது என்றால், இது விரைவான ஏற்பாட்டினால் வரும் நன்மையைவிட ஏதோ சில பெரிய நன்மைகள் உருவாகுவதற்காக மாத்திரமேயாகும். இந்த நம்பிக்கையில்... சகல காரியங்களும், இன்னுமாகத் தாமதம்போன்று தோன்றும் தாமதங்களும்கூட, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாக நடக்கும்" என்ற நிச்சயத்துடன், கிறிஸ்தவன் இளைப்பாறுவானாக (உரோமர் 8:28); "ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." (எபிரெயர் 10:35, 36)

-------------------------------